**கோவை, இரண்டாம் கோட்டம் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.**

**முன்னிலை - திரு.கா. ஜெகதீசன், எம்.இ.,**

பணிக்குழு - தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி திரு. ம. அங்குராஜ், தட்டச்சர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகம், இரண்டாம் கோட்டம், கோவை - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டது - 12.09.2014 பிற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் பணி வரன் முறை செய்து ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

---

எண்.அ/339/2016 நாள். 26 .02.2016.

**படிக்கப்பட்டது**

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.5901/PSD-F/2014 நாள்.13.08.2014 & 29.09.2014.
2. சென்னை-6, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயலாணைகள் எண்.ஜி3/28178/2014 நாள்.04.09.2014.
3. சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் செயலாணை எண்.ஓ1/24338/2014 நாள்.08.09.2014.
4. சென்னை-6, தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண்.ஜி3/28178/2014 நாள்.16.12.2015.
5. சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் குறிப்பாணை எண்.ஓ1/24338/2014 நாள்.23.01.2016.

--------

பார்வை 2ல் 3ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி கோவை இரண்டாம் கோட்ட தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்டு, 12.09.2014 பிற்பகல் முதல் தட்டச்சராக பணிபுரியும் திரு. ம. அங்குராஜ் என்பவரின் பணி, பார்வை 5ல் காணும் குறிப்பாணையின்படி அவர் தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 12.09.2014 பிற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

**"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV 2013 to 2014 recruitment".**

...2...

தமிழ்நாடு மாநில மற்றும் பொது சார்நிலைப் பணிகள் விதி 23 ( a )( 1 )ன் படியும் மற்றும் தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்பு விதிகளின் கீழான விதி 32ன்படியும் அன்னாரை தட்டச்சர் பதவியில் பணி வரன்முறை செய்யப்பட்ட நாளான 12.09.2014 பிற்பகல் முதல் தொடர்ச்சியான மூன்று ஆண்டு கால பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

மேலும், மேற்படி தகுதிகாண் பருவத்தில் அரசாணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.22.07.08ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தனியர் பணிநியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் Directorate of Technical Education நடத்தும் Certificate Course in Computer on Office Automation என்ற பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே அவரது தகுதிகாண் பருவத்தை பூர்த்தி செய்ய இயலும் என்பதால் தனியர் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

மேலும் தனியர் உதவியாளராகப் பதவி உயர்வு பெறுவதற்கு, தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு, சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-1 மற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் துறை தேர்வுகள் பகுதி 'அ' மற்றும் 'ஆ' ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

26/02/16

இணை இயக்குநர்
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
இரண்டாம் கோட்டம், கோவை-01

24/2/16

24.2.16

பெறுநர்
திரு.ம. அங்குராஜ்,
தட்டச்சர், இவ்வலுவலகம்.
நகல்-பணிப்பதிவேடு
நகல்-உபரி.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது
1. தொழிலாளர் ஆணையர், தேனாம்பேட்டை, சென்னை-6.
2. இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை-14.
3. கூடுதல் இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கோவை-12.